உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 09 வியாழக்கிழமை [26-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 234

# புலிகளுடனான பேச்சுக்கள் தற்போதைக்கு இல்லை

## கதிர்காமர் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 26

'விடுதலைப் புலிகள் என்றோ ஒருநாள் அரசுடன் பேச்சு நடத்த வருவார்கள் என எதிர்பார்க்கிறேன். ஆனாலும் விரைவில் பேச்சு நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

மேற்கண்டவாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக்கோரிக்கையைக் கடுமையாக விமர்சித்த கதிர்காமர் ''இராணுவ சரித்திரத்தில் பிரபாகரன் ஒரு வெற்றிகரமான சிறந்த படைத்தலைவராகக் கருதப்படுவார்'' என்று கூறினார்.

''1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது. ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது இந்த நாட்டில் தமிழருக்குத் தனிநாடு என்ற தேவை தற்போது இல்லை'' என்றும் அவர் சொன்னார். (இ-3-9)

## மட்டக்களப்பில்

# அதி உயர் பாதுகாப்பு பகுதியில் குண்டுவெடிப்பு

மட்டக்களப்பு, ஒக. 26

மட்டக்களப்பு நகரில் அதி உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் புதுநகர் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் தேசிய துணைப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்.

காளி என அழைக்கப்படும் கமல்ராஜ் (19 வயது); எம். மரியங்ஸ்-ன் (19 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்த இருவரும் கடை ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த சமயம் குண்டு வெடித்தது என்றும்—

அவர்கள் வைத்திருந்த குண்டு வெடித்ததா? அல்லது அங்கு முன்னரே வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததா? என்பது குறித்துப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது (21-3)

# வவுனியாப் பகுதியில் நேற்று ரெலோ முகாம் மீது தாக்குதல்

## வவுனியாவில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

வவுனியா, ஒ. 26

வவுனியாவில் பொதுமக்களைப் பாதிக்கத்தக்க வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைக் கண்டித்து நாளை மறுதினம் வவுனியா நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்க புளொட் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளதாக அந்த அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (இ-3-164)

## ஐவர் படுகாயம் வாகனங்கள் எரிப்பு

வவுனியா, ஒகஸ்ட் 26

வவுனியா—மன்னார் வீதியில் வேப்பங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 5 மணிக்கு இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்து உக்கிளாங்குளம் பகுதியில் அமைந்திருந்த ரெலோ முகாம் தாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் காரணமாக ஐந்து ரெலோ உறுப்பினர்கள் படுகாயமடைந்தனர். முகாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

வேப்பங்குளம் பகுதியில் பழைய நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியத்துக்கு முன்பாக மின்மாற்றி ஒன்று உள்ளது. நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மின்மாற்றியை நோக்கி

[10 ஆம் பக்கம் பார்க்க]

# சப்-இன்ஸ்பெக்டர் உட்பட 6 அதிரடிப்படையினர் பலி!

## அம்பாறையில் தாக்குதல்

கொழும்பு, ஒக. 25

அம்பாறை மாவட்டத்தில் புளுக்குணாவ இராணுவ முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் காலை 8 மணியளவில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஆறு விசேட அதிரடிப்படையினர் உயிரிழந்தனர் என பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் 13 அதிரடிப் படையினர் காயமடைந்தனர் என்றும்—

அவர்களில் ஆபத்தான நிலையில் இருந்த 9 படை

[10 ஆம் பக்கம் பார்க்க]



அப்ப கதிர்காமருக்கும்நோபல் பரிசு கிடைக்கும் போல......!

## ரெலோ எம். பி. கூறுகிறார்

# படையினர் சுற்றி வளைத்து முகாம் மீது சுட்டனர்!

## உடைமைகளுக்குத் தீ வைப்பு

வவுனியா, ஒக. 26

உக்கிளாங்குளத்தில் உள்ள எமது முகாமைச் சுற்றி வளைத்த 50 க்கு மேற்பட்ட அதிரடிப் படையினர் எமது முகாமை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்னர் முகாமுக்குள் கிடந்த எமது உடைமைகளுக்குத் தீ வைத்து விட்டு முகாமை அடித்து நொறுக்கினர்.

ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் (செல்வம்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முகாம் மீதான தாக்குதல்

[10 ஆம் பக்கம் பார்க்க]

# தாக்குதலில் குழந்தை பலி!

வவுனியா, ஒக. 26

வேப்பங்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியத்தில் அமைந்திருந்த அகதிமுகாமில் படுத்திருந்த 2 வயதுக் குழந்தை ஒன்று மூளை சிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்தது.

சம்பவத்தைத் தொடர்ந்து கண்மூடித்தனமாக அகதி முகாம் மற்றும் நெருக்கமான குடியிருப்புக்கள் ஆகியவற்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## உதயன் மீதான தாக்குதல்

# பாரபட்சமற்ற விசாரணை நடத்தி முடிவைப் பகிரங்கப்படுத்துங்கள்!

## சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம்

நியூயோர்க், ஒக. 26

உதயன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பாரபட்சமற்ற முறையில், முழு அளவிலான விசாரணைகளை உடனடியாக நடத்தி, அந்த விசாரணைகளின் முடிவைப் பகிரங்கப்படுத்தவும்.

இவ்வாறு ''பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு'' அமெரிக்காவில் இருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கேட்டுள்ளது.

உதயன் மீதான தாக்குதலை இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தலாகக் கொள்வதாக அந்தக் குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் சர்வதேச அமைப்பான ''பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு'' இம்மாதம் 24 ஆம் திகதியிட்டு ஜனாதிபதி சந்திரிகாவுக்குப் பெயரிட்டு அனுப்பிய கடிதத்தின் முழுவிவரமும் வருமாறு:

வடபகுதி நகரமான யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடப்படும் ஒரேயொரு தமிழ் நாளேடான உதயன் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அறிந்து ''பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு''

[2 ஆம் பக்கம் பார்க்க]

# சந்நிதி ஆலயம் சென்ற யுவதி விபத்தில் பலி!

நெல்லியடி, ஒக. 26

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சென்ற இளம் பெண் ஒருவர் விபத்தில் மரணமானார்.

மீசாலையைச் சேர்ந்த கனகசபைதிருமகள் (வயது18) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் உயர் வகுப்பு மாணவியான இவர் தமது பெரிய தகப்பனாருடனும் பெரிய தாயாருடனும் ஒன்றாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் தொண்டமானாறு வல்லை வீதியில் பழைய கிறேசருக்கு அருகில் நேற்றுக் காலை இந்த விபத்து நிகழ்ந்தது

மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்த இவரை பின்

[10ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வாழ்த்துகின்றோம்

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தரும் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினருமாகிய

**திரு. எஸ். கே. தங்கவடிவேல்**

அவர்கள் நீதி, அரசமைப்பு, இனவிவகார அமைச்சினால் யாழ். மாவட்டத்தின் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளமையையிட்டு மனதார வாழ்த்தி அவரது சேவை மேன்மேலும் பெருக இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ். விலைமதிப்பீட்டுத் திணைக்கள
உத்தியோகத்தர்களும் நலன்புரிச் சங்கத்தினரும்.

யாழ்ப்பாணம். (68472)



## யாழ்ப்பாணம் வந்துவிட்டது!

**BEN CAFE**
**INSTANT COFFE MIX**
**திடீர் கோப்பி**

பால், சீனி உள்ளடக்கியது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம்

**ARUNS SPORTS SPOT**
347, Kasthuriyar Road, Jaffna.

(சி/8587)



## விற்பனைக்கு

சாவகச்சேரி கண்டி வீதி
பிரதேச செயலகத்துக்கு முன்னால்
நான்கு (4) கடைகள் அடங்கிய இரண்டு பரப்பு காணி
விற்பனைக்குள்ளது.

தொடர்பு:
ப. குகன்,
கந்தையா வீதி, சாவகச்சேரி.

(சி/8648)


ஓம் விராட்விஸ்வ பிரம்மனே நமஹ!

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

!!! !!!



செல்வி
**சிவன்ஆச்சாரி கார்த்திகா**

மலர்வு: 08-09-1991
உதிர்வு: 26-08-1997

காலஞ்சென்ற முருகன் ஆச்சாரியாரின் பேர்த்தியும், சிவன் ஆச்சாரியாரின் மகளுமாகிய கார்த்திகாவின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (26-08-99) அவரது இல்லத்தில் நடைபெறும். இரண்டாம் ஆண்டில் அன்னாரை நினைவு கூருவதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, ஆச்சி, சகோதரர்கள்,
சித்தப்பாமார்கள், சித்திமார்கள்,
மாமன்மார்கள், அத்தைமார்கள்.

''ஓம்சக்தி'' நகைத் தொழிலகம்,
93, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (68487)

# கொழும்பு செல்ல பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 26

கொழும்பில் இடம்பெறவுள்ள ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை வினாத்தாள் மதிப்பிடும் பணிக்குச் செல்லவிருக்கும் பிரதம உதவிமதிப்பீட்டாளர்களுக்கான பயண ஏற்பாடுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி செய்யப்பட்டுள்ளன என்றும்—

அன்றையதினம் காலை 8 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனைக்கு வருகை தருமாறும் — யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பரீட்சை மதிப்பீட்டாளருக்கான பயண ஏற்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதி செய்யப்பட்டுள்ளன என்றும்—

மதிப்பீட்டாளர்களை அன்று காலை 8 மணிக்கு யாழ். வலய அலுவலகத்தில் சமுகம் தருமாறும் — அவர் மேலும் கேட்டுள்ளார்.

(இ-3)

# விளையாட்டு நிகழ்வு

குருநகர், ஒக 26

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'தூயஒளி' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரைஇறுதி ஆட்டத்தில் இன்று பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்அன்ரனிஸ் 'ஏ' அணி மோதவுள்ளது. (ஐ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 26

மறவன் புலோ மேற்கு சனசமூக நிலைய பாலா பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் மா. லீலாவிநோதன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக சர்வோதய செயற்றிட்ட அத்தியட்சகர் எஸ், வி. சங்கரப்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக சாயி கல்வி நிறுவன இயக்குநர் ஓய்வுபெற்ற அதிபர் செ. பத்மநாதன் கைதடி—நாவற்குழி அ. த. க. பாடசாலை அதிபர் செ. பேரின்பநாதன், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கல்வி உத்தியோகத்தர் இ. சௌந்தரநாயகம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

**பாரபட்ச...**
(முதலாம் பக்கத் தொடர்)

ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது.

ஒகஸ்ட் 21 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாதவர்கள் உதயன் அலுவலகக்கட்டடத்தின் மீது இரண்டு கிரனேட்டுக்களை வீசியுள்ளனர். தாக்குதல் நடைபெற்ற நேரம் சுமார் 70 பேர் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தனர் என்று பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம். வி. கானமயில்நாதன் தெரிவித்துள்ளார். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாதுகாப்பு அலுவலர் ஒருவர் காயமடைந்தார்.

இப்போது ஸ்ரீ லங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து வெளியிடப்படும் தமிழ்ப் பத்திரிகை என்ற வகையில் மிகவும் பயமுறுத்தலான சூழ்நிலையிலும் உதயன் இயங்கி வருகிறது.

[9 ஆம் பக்கம் பார்க்க[


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

அஜித், தேவயானி,
பார்த்தீபன்
நடித்த

**நீ வருவாய் என**
(புதிய வெளியீடு)

காட்சிகள்: 10-30, 2-30

(68360)



# தேவை

பலவர்ண அச்சக வேலையில்
அனுபவமுள்ளவர்கள் (ஓவ்செற்) தேவை.
கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**பிள்ளையார் அச்சகம்**
**PILLAIYAR OFF SET PRINTERS**
புலவனார் வீதி, கல்வியங்காடு.
தொலைபேசி இல. 070 -- 212226

(68493)


# கண்ணீர் அஞ்சலி

25-08-1999 இறைபதம் எய்திய
மொறட்டுவைப் பல்கலைக்கழக முதலாம் வருட
பொறியியற் பீட மாணவன்
**க. ஸ்ரீஸ்கந்தவேளினதும்**
பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் வருட
பொறியியற் பீட மாணவன்
**க. முருகவேளினதும்** தங்கையாகிய

**திருமகள் கனகசபை**
(மீசாலை)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக்காணிக்கையாக்குவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேராதனை, மொறட்டுவைப்
பொறியியற்பீட நண்பர்கள்.

(68495)

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## தளபாடங்கள் வழங்கல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் தளபாடங்களைச் செய்து வழங்குவதற்குத் தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | விரிவுரை மண்டபக் கதிரைகள் | — 165 |
| 02. | உயர் அதிகாரிகள் மேசை | — 19 |
| 03. | கண்ணாடி முகப்பிலான அலுமாரிகள் | — 15 |
| 04. | ஸ்ருல் | — 114 |
| 05. | அலுவலக மேசை | — 21 |
| 06. | மரத்தினாலான வாங்குகள் | — 16 |
| 07. | கற்கை மேசைகள் 8' 4' | — 11 |
| 08. | மாநாட்டு மேசை | — 01 |
| 09. | பக்க ராக்கை | — 04 |
| 10. | ஆய்வுகூட ஸ்ருல் | — 60 |
| 11. | நீளமான தேநீர்ச்சாலை மேசை 5'X3' | — 02 |
| 12. | விரிவுரை மண்டப மேசை $4\frac{1}{2}$X$2\frac{1}{2}$X$2\frac{1}{2}$ | — 02 |
| 13. | ரொட்டி மேசை | — 01 |
| 14. | காசாளர் மேசை | — 01 |
| 15. | உருக்காலான தேநீர்ச்சாலை மேசைகள் | — 15 |
| 16. | உடுப்பு ராக்கை | — 53 |
| 17. | உருக்காலான தேநீர்ச்சாலைக் கதிரைகள் | — 25 |

(1) கேள்விப்பத்திரதாரர் மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூ 500 உம் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூ. 5000 உம் நிதிக்கிளையில் காசாக செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் நிதியாளருடன் தொடர்பு கொண்டு கேள்விப்பத்திர ஆவணங்களை அலுவலக நேரத்தில் 09 - 09 - 99 திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

(2) பூர்த்தியாக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட்டு 17 - 09 - 99 பிற்பகல் 2 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பி. ப. 2-30 மணிக்குப் பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

– பதிவாளர்

(சி/8647)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான் இயக்கத் தலைவர் குண்டுவெடிப்பில் தப்பினார்

## தலைமையகத்தின் மீது லொறி மூலம் தாக்குதல்

கண்டகார், ஓக. 26

**ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பின் தலைவர் தங்கியிருந்த இல்லத்தின் அருகே பெரும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அதில் அவர் உயிர் தப்பிவிட்டதாக அறிவிக்கப் படுகிறது.**

கண்டகார் நகரில் தலிபான் தலைவர் முல்லா முஹமட்ஓமர் தங்கியிருந்த தலைமையகத்துக்குவெளியிலேயே இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகவும —

தமது தலைவர் ஆபத்தின்றி தப்பிவிட்டதாகவும் தலிபான் அமைப்பு தெரிவித்தது.

இச் சம்பவத்தில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தலிபான் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட 30 பேர் காயமடைந்தனர்.

லொறி ஒன்றில் மறைத்து எடுத்துவரப்பட்ட குண்டு மூலம் இத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் —

தாக்குதலுக்கு யார் பொறுப்பு என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஒஸாமா பின் லேடனின் முகாம்கள் மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களின் பின்னர் கண்டகார் நகரில் இருந்து பெரும்பாலான மக்கள் வெளியேறியுள்ளனர். (ஐ)

## அமெரிக்கா மறுப்பு

வாஷிங்ரன், ஓக. 26

தலிபான் இயக்கத் தலைவர் தங்கியிருந்த சமயம் தலைமையகக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும்தனக்கும் தொடர்பு இலலை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலுக்கு அமெரிக்காவே பொறுப்பு என்று

உலக அரங்கில்

தலிபான் குற்றஞ்சாட்டியதை அடுத்தே அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. (ஐ)

### துருக்கி பூகம்ப அனர்த்தம்:

## ஆறு நாள்களின் பின்னர் உயிருடன் மீண்ட சிறுவன்



அங்காரா, ஓக. 26

இஸ்மாயில் சீமன் என்ற இந்தச் சிறுவனுக்கு (படம்) வயது மூன்று. மிகப்பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்திய துருக்கி பூகம்பத்தில் சிக்குண்ட பல்லாயிரக் கணக்கானோரில் இவனும் ஒருவன்.

அனர்த்தம் நிகழ்ந்து ஆறு நாள்களின் பின் — சுமார் 140 மணித்தியாலங்களின் பின்னர் – இடிபாடுகளின் ஆழத்தில் இருந்து இந்தச் சிறுவனை இஸ்ரேலிய மீட்புக் குழுவினர் மீட்டனர்.

இனி எவருமே உயிர்பிழைக்க வாய்ப்பு இல்லை எனக் கூறப்பட்டு மீட்புப் பணியாளர்கள் தமது பணியைக் கைவிட்டு வெளியேறத் தொடங்கிய சமயத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்து இந்தச் சிறுவன் எழுப்பிய அபயக்குரல் கேட்ட சிலர் அவ்விடத்தை தேடிச் சென்று பல மணிநேரம் மேற்கொண்ட முயற்சியினால் இச்சிறுவன் காப்பாற்றப்பட்டான்.

இச்சிறுவன் தனது தந்தையையும் மூன்று சகோதரிகளையும் பூகம்பத்துக்குப் பறிகொடுக்க நேர்ந்துள்ளது. தாயார் படுகாயமடைந்துள்ளார்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் சிறுவனைப் படத்தில் காணலாம். [ஐ]



துருக்கியில் பூகம்பம் ஏற்படுத்திய அவலங்கள் தொடர்கின்றன. சேதமுற்ற கட்டடம் ஒன்றில் சுமார் 108 மணித்தியாலங்கள் சிக்கியிருந்த 12 வயது சிறுமி இவள். (ஐ)

## ஈரானிய நகரில் பெண் பொலீஸ் நிலையம்

தெஹ்ரான், ஓக. 26

ஈரானின் வட–கிழக்கு நகரான மஷ்ஹட்டில், முதல் பெண் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பெண் பொலீஸார் மட்டும் கடமையில் ஈடுபடும் இந்தப் பொலீஸ் நிலையம் ஞாயிறன்று திறந்து வைக்கப்பட்டது. ஆனால் மேற்படி பொலீஸ் நிலையத்தில் எத்தனை பெண் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்ற விவரம்வெளிபிடப் படவில்லை.

கடந்த செப்ரெம்பர் மாதம் மேற்படி பெண் பொலீஸ் நிலையத்தை ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் பெண் பொலீஸார் இஸ்லாமிய சட்டங்களுக்குஅமைவாகவேஆடைகளை அணிவர் எனக் கூறப்படுகின்றது ஈரானின் மேலும் ஐந்து முக்கிய நகரங்களில் பெண் பொலீஸ்நிலையங்கள் அமைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-ரி)

## உலகின் பலசாலி நானே என்கிறார் அமெரிக்கர்

புளோரிடா, ஓக. 26

உலகில் மிகவும் பலசாலியான மனிதன் தானே என்று பிரகடனப் படுத்தியுள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த 51 வயதான ஜோன் வூடன்.

16 ஆயிரம் தொன் (14 52 மில்லியன் கிலோ கிராம்) எடை கொண்ட பெரும் யுத்தக் கப்பல் ஒன்றை 70 அடி தூரத்துக்கு கட்டி இழுத்து உலக சாதனை புரிந்துள்ளார் இவர்.

பொஸ்ரனைச் சேர்ந்த இவர் உலகின் பலசாலியாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறவுள்ளார். போடர்டாலி துறைமுகத்தில் இடம்பெற்ற இந்தத் துணிகர நிகழ்ச்சியைப் பார்க்க பெரும் எண்ணிக்கையானோர். அங்கு கூடி இருந்தனர். வூடன் சுமார் 40 நிமிட நேரத்தில் இந்த சாதனையை நிகழ்த்தினார். நாஸா விஞ்ஞானிகள் அனுமதிப் பார்களேயானால் ஒரு விண்கலத்தை கட்டி இழுத்து சாதனை புரிய வேண்டும் என்பதே தனது அடுத்த ஆசை என்கிறார் வூடன். [ஐ]

# வாஜ்பாயை பிரதமராக்குவதே எமது கூட்டணியின் நோக்கம்

## கருணாநிதி கூறுகிறார்

தஞ்சாவூர், ஓக. 26

இந்தியாவின் ஜனநாயகத்தையும் இந்தியாவையும் பாதுகாக்க ஏற்ற மனிதரான வாஜ்பாயை மீண்டும் பிரதமராக்குவதே தேசிய ஜனநாயக கூட்டணியின் குறிக்கோள் என்று தி. மு. க. தலைவரும் தமிழக முதல்வருமான மு. கருணாநிதி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தஞ்சையில் நடை பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:-

வாஜ்பாய்க்கு எதிர்மாறாக கூறப்படும் சில கருத்துக்கள் ஏற்கக் கூடியவை அல்ல; அவர்பிரதமராவதைத்தடுக்க முடியாது.

வாஜ்பாய் அரசு கவிழ்க்கப் பட்டதால் தேர்தல் வந்தது ஆட்சி ஜெயலலிதாவால் கவிழ்க்கப்பட்டது. தேர்தல் தானாக வந்தது தான் ஆட்சியைக் கவிழ்க்கவில்லை என்கிறார் ஜெயலலிதா. பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் தனக்கெதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்கிறார் சட்டப்படி நியாயப்படி ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குகளை அரசு நடத்துகிறது பொய் வழக்குகள் எனக்கூறி ஊரை ஏமாற்றுகிறார் ஜெயலலிதா இவ்வளவையும் தெரிந்து கொண்டு அவருக்கு ஆதரவளித்தால் தமிழ்நாடு புதைகுழிக்குச் செல்லும் — என்றார். (ஐ-ரி)

# மத்திய கிழக்கு சமாதானப் பாலம்

அம்மான், ஓக. 26

இஸ்ரேலையும் ஜோர்தானையும் தொடுக்கும் பாலம் ஒன்று ஜப்பானிய நிதி உதவியுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

'ஷெய்க்ஹுசேய்ன்' பாலம் என அழைக்கப்படும் இப் பாலம் ஜோர்தான் ஆற்றுக்கு வடக்கே உள்ளது.

இரு நாடுகளையும் இணைக்கும் இந்த சிறிய பாலம் பெரிய நம்பிக்கைகளுடன் அமைக்கப் பட்டிருப்பதாக ஜோர்தானிய வெளிவிகார அமைச்சர் டேவிற் லெவி தெரிவித்தார்.

1948 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தின் போது இந்தப் பாலம் தகர்க்கப்பட்டிருந்தது. பின்னர் இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையே 1994 இல் சமாதான உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து தற்காலிகமாக மரத்தினால் அது கட்டப் பட்டது.

தற்போது அது ஜப்பானிய உதவியுடன் 7 மில்லியன் டொலர் செலவில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## உடன்பாடு

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிளர்ச்சிக் குழுத் தலைவர் கடந்த செவ்வாயன்று சமாதான உடன்படிக்கையில்கைச்சாத்திட்டுள்ளார்

கடந்த சுமார் ஒருவருட காலமாக கபீலா அரசுக்கு எதிராக இடம்பெற்று உள்நாட்டு யுத்தம் இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளது. [ஐ]

# 3 வயதுச் சிறுமி காளிக்கு நர பலி!

தென்னிந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேஷில் மூன்று வயதான ஒரு சிறுமியைக் காளியின் ஆசியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பலி கொடுத்தமை தற்போது தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் பொலீஸார் இது பற்றி அறிவித்தனர். கல்லுடைக்கும் தொழில் புரியும் ஒரு கூட்டத்தினர் இந்தச் சிறுமி தனது தாயுடன் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அவளைக் கடத்தி வந்து காளிக்கு பலி கொடுத்துள்ளனர். தங்களின் நல்வாழ்வுக்காக காளி அம்மனின் அருளைப் பெற்றுக் கொள்ளவே அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டுள்ளதாக பொலீஸார் நம்புகின்றனர்.

கற்களை உடைக்கப்பயன்படும் ஒரு இயந்திரத்துக்கு அருகிலிருந்த இந்தச் சிறுமியின் தலை துண்டிக்கப்பட்ட உடல் பொலீஸாரினால் கண்டெடுக்கப்பட்டது. இந்தக் கொலை நடந்த இடத்தில் பூக்கள், தேங்காய், மஞ்சள் என இந்துக்களின் வழிபாடுகளின் போது பயன்படுத்தப் படும் பல மங்களப் பொருள்களும் குவிந்திருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-ரி)

## போர்க் கைதிகளை ஏற்க பாகிஸ்தான் மறுப்பு

கார்கில் சண்டையின் போது இந்தியாவினால் போர்க் கைதிகளாக பிடிக்கப்பட்ட 8 பாகிஸ்தானிய இராணுவத்தினரை ஏற்றுக் கொள்ள இஸ்லாமபாத் மறுத்து வருவதை அடுத்து இவர்களை விடுவிப்பதில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது.

போர்க் கைதிகளான இராணுவத்தினரை பாகிஸ்தான் முறைப்படியாக ஏற்றுக் கொள்வது மிகவும் அவசியம் என புதுடில்லி தெரிவித்துள்ளது.

போர்க் கைதிகளை பாஸ்பரம் ஒப்படைப்பதில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியைஇரு நாடுகளும் நாடியுள்ளன

பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை முன்னிட்டு — நல்லெண்ண நடவடிக்கையாக பாக் போர்க் கைதிகளை விடுதலை செய்ய இந்தியா முன் வந்தது தெரிந்ததே. [இ-க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஜோதிடம்

சாதகம் எழுத, பலாபலன் அறிய, விவாகப் பொருத்தம் பார்க்க, பிரயாணத் தடை விவாகத் தாமதம் இவைக்கு சாந்தி பரிகாரம் காண, கிரக தோஷ யந்திரம் வீடு வியாபாரஸ்தலங்களுக்கு சௌபாக்கிய லெச்சுமி யந்திரம், பிரயாணம் தடங்கலின்றி நிறைவேற யந்திரங்களுக்கு நேரில் சந்தியுங்கள். விஸ்வ பிரம்ம ஸ்ரீ மா. தங்கவேல் சோதிடர், No.9, டச்சு வீதி, சாவகச்சேரி. [68463]

### விற்பனைக்கு

5 அடி நீளமும் 2 அடி அகலமும் உடைய மூன்று சோக்கேசுகளும், 6 அடி நீளமும் 2 அடி அகலமும் உடைய இரண்டு சோக்கேசுகளும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். த. சங்கரப்பிள்ளை, 21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (68456)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: K.அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதிNo. T.P. 070-212354, 070-212383. (68430)

### மணமகள் தேவை

யாழ்.கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு லீவில் வந்து நிற்கும் மணமகனுக்கு அதே மதத்தைச் சேர்ந்த அழகிய, குடும்பப் பாங்கான மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் மற்றும் விவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 932, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/8645)

---

நாளை மகத்தான ஆரம்பம்

**திருமறைக் கலா மன்றம்**

நடத்தும்

## 'தமிழ் விழா - 99'

தொடர்ந்து 3 நாள்கள்

**27, 28, 29 ஒகஸ்ட் 1999**

நேரம்: 5. 30 மணி

### மாலை மன்ற அரங்கில்

தலைமை: T. வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர்)

சிறப்புரை: கலாநிதி S. சிவலிங்கராஜா

''ஈழத்தில் தமிழ்க் கவிதை''

### கருத்துக்களம்

தலைமை: பேராசிரியர் A. சண்முகதாஸ் (உயர் பட்டப் பீடாதிபதி)

விடயம்: ஈழத் தமிழரின் புலப்பெயர்வு தமிழ்க் கலாசாரத்தை சீர்குலைக்குமா?

**சீர்குலைக்கும்**

செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை
செல்வன் யோண்சன் ராஜ்குமார்

**சீர்குலைக்காது**

திரு. R. திலகரட்ணம்
திரு. P. S. அல்பிரட்

### நாடகம்

**''புயலான பூவை''**

(யாழ் கன்னியர் மடம் மகாவித்தியாலயம்)

வெள்ளி காலை 10.00 மணிக்கு
கிராமிய பாடல்கள் அடங்கிய

**செம்மணல்**

ஒலி நாடா வெளியீடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலா மன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/8642)

---

## NEW BRIGHT DAY

26 - 08 - 1999 பி. ப. 3-00 மணி

சான்றிதழ்களும் - பரிசில்களும்

வழங்கும்

**வைபவம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.
நியூ பிறைற் கல்வி நிலையம்
யா/ மாட்டின் வீதி.

(68466)

---

A GURANTEED PRODUCT

## KOBE

ANTENNA
BOOSTER
NO:1
SELLER IN SRI LANKA

FROM LANKA NIPPON

AVAILABLE ISLANDWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

**LANKA NIPPON**

18, KEYSER STREET, COLOMBO-11
Tel: 324726, 437735 FAX: 437736

(சி/8583)

---

## கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

## காவடி மார்க் கற்பூரம்

**நின்று நிலைக்கும் ஜோதிமயம்**
**காவடி கற்பூரம் என்றும் தரும்**

CAVADI
SINCE 1967
REFINED CAMPHOR 105 TABLETS

கற்பூரம் என்று கேட்காதீர்கள்
**"காவடி" என்று கேட்டுவாங்குங்கள்**

ஏக விநியோகத்தர்கள்

## பிரபா டிரேடிங் கம்பனி

31, கபோஸ் லேன், கொழும்பு 11.
தொலைபேசி: 329426, 422750

(சி/85 13)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



அமரர் வல்லிபுரம் நாகராசா

மண்ணில்: 23-03-1945
விண்ணில்: 27-07-1999

திதி: 26-08-99

ஏழ்மையாய் வாழ்ந்த எம்மை ஏற்ற
ஏணியாய் நின்று ஏற்றிய
கடமைதான் போது மென்று
கண்களை மூடிவிட்டீர் ஐயா! — ஆனால்
எம் கண்ணுக்குள் வந்துவிட்டீர்! ஐயா!
தினம் எம் கண்ணீரில் குளிக்கிறீர் ஐயா!

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

மயூரன் இல்லம்,
பாரதி லேன்,
சங்கானை.

[68477]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. நா. வேலாயுதபிள்ளை
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் **வேலுப்பிள்ளை நாகலிங்கம்**

அவர்கள் 23—08—99 அன்று காலமானதையிட்டு அவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

அதிபர், ஆசிரியர்கள்.
யா/திருநெல்வேலி, இ த க பாடசாலை.
(68470)

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் முற்பணம் இல்லாமல்
ரெலிபோன், பக்ஸ் (Fax)
மற்றும் சமையல் வசதிகளுடன் கூடிய வசதியான அறைகள் மாதாந்த வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். வயது முதிர்ந்தவர்களுக்கு இலவச மருத்துவ வசதியும் செய்து கொடுக்கப்படும்,

**ZARIN RAUF** (J. P.)
No. 83, 37th Lane, Colombo-6
T. P. 589987, 587628
யாழ்ப்பாணத்தில் தொடர்பு:
ஜெயா வைன்டிங் வேக்ஸ்
T. P. No. 2691 (68460)

## இலவச மருத்துவ முகாம்

யாழ். லயன்ஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச மருத்துவ முகாம் இன்று வியாழன் காலை 8.30 மணிக்கு நாவாந்துறை புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்று மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெறுவதுடன் இலவசமாக மருந்துகளும் வழங்கப்படும்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து இலவச திருமணப் பதிவும் இடம்பெறும். (ஐ-ரி)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம் பிள்ளை 'கல்வி நிர்வாகக் கட்டமைப்பு' எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

இந்த நிகழ்விற்கு யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் க. சி. குகதாசன் தலைமை வகிப்பார்.

[ஐ-ரி]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 23 — 07 — 1925 | 27 — 07 — 1999 |

அமரர் **ஐயாத்துரை நல்லையா**
( இளைப்பாறிய எழுதுவினைஞர் )

நம் குடும்பத்தின் குல விளக்கே!
மாதமொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

தாவடி,
கொக்குவில். [68468]

# விண்ணக வாழ்வின்
# பதினைந்தாவது ஆண்டு நிறைவு



## திருமதி தியாகராசா மாணிக்கம்
(சின்னாலடி, காரைநகர்)

மலர்வு
04 - 11 - 1936

உதிர்வு
26 - 08 - 1983

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எமக்காகவே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வமே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த அம்மா! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நல்லைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (26 - 08 – 99) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தான நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதியபோசன விருந்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மிகப் பணிவாக வேண்டிக்கொள்கின்றோம்.


**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
இல. 212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
இல. 56 58, ஈ. எஸ். பொனான்டோ மாவத்தை,
கொழும்பு – 6.
(சி/8628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31-ம் நாள் நினைவலைகளும்
## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய
## அழைப்பும்

மலர்வு 12 — 07 — 1962



உதிர்வு 27 — 07 — 1999

அமரர் **சுப்பிரமணியம் தவராசா**

[ உரிமையாளர், லீலா ஸ்ரோர்ஸ். ]

சீரான குடும்பமொன்றில் குல விளக்காய் மிளிர்ந்திட்டீர்
மாறாத நினைவுகளை மனதினிலே பதித்து வைத்தீர்
ஆறாது அப்பா தங்கள் பிரிவுத்துயர் அவனியிலே
பேரான பரம்பொருளின் திருவடியில் சேர்ந்தீரே அப்பா!

இன்று வியாழக்கிழமை [ 26—08—99 ] காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

லீலா ஸ்ரோர்ஸ்,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

[68420]

## விளையாட்டு விழா

சுன்னாகம், ஓக. 26

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்ற பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறும். (உ-27)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

வலி. கிழக்கு ஓக. 26

உரும்பிராய் கிழக்கு, கோண்டாவில் போன்ற பகுதிகளில் மக்களின் உயிர்க்கொல்லியான கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்து வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். [ஜ-180]

## கருத்தரங்கு

கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று கடந்த 21 ஆம் திகதி பொல்கொல்லையில் உள்ள கூட்டுறவுக் கல்லூரியில் ஆரம்பமானது.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு ஒரு வாரகாலம் தொடர்ந்து நடைபெறும்

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் இக் கருத்தரங்கில் பங்குபற்றுகிறார். அத்துடன் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் இந்தியாவில் பூனே கூட்டுறவுக் கல்லூரியில் நடைபெறும் பயிற்சிக் கருத்தரங்கிலும் இவர் கலந்துகொள்வார். [ஜ-17]


## விற்பனைக்கு

ஐஸ்கிறீம்கோண், ரொபி வகைகள், ஐஸ்பழதயாரிப்புகளுக்குரிய குச்சி வகைகள், வெங்காயம் பொதிசெய்யும் நெற்பேக்குகள், ஸ்ரிக்கர் படங்கள், தவிடு, தேங்காய்ப்பிண்ணாக்கு, தரமான தேயிலை வகைகள், சோளன், கச்சான், தொலைபேசிவகைகள், கால்மிதிகள் என்பனவற்றை மொத்தமாக மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நாதன் களஞ்சியம்,
213C. ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
T. P 2916

[68450]


## வாழ்த்துகின்றோம்



**திரு. S. K. தங்கவடிவேல்**

(விலை மதிப்பீட்டுத் திணைக்களம் -யாழ்ப்பாணம்)

எமது கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவரும்
முன்னாள் செயலாளர், பொருளாளர் மற்றும்
கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்
கலாசார கழக போஷகரும் இருபாலை மத்திய
சனசமூக நிலைய செயலாளரும்
Kopay English Study Circle செயலாளரும்
முன்னாள் வானொலிக்கலைஞரும், பனை, தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முன்னோடிகளில்
ஒருவருமாகிய

**திரு. S. K. தங்கவடிவேல்** அவர்கள்

**சமாதான நீதிவானாக**

நியமிக்கப் பட்டதைப் பாராட்டி வரவேற்பதுடன்
தொடர்ந்தும் அவர் சேவை எமக்குக்கிடைக்க
வாழ்த்துகின்றோம்.

செயற்குழு,
பழைய மாணவர் சங்கம்.

யா/கோப்பாய்,
கிறிஸ்தவக் கல்லூரி.

(சி/8624)


NEW BRIGHT DAY
J/MARTYN ROAD,
1999 - 08 - 26

**நியூ பிறைற் கல்வி நிலைய தினவிழா**

சிறப்பு பெறவும் - கல்விப் பணியில் மேன்மேலும் வளர்ச்சியடையவும்

**வாழ்த்துகின்றோம்**

**அனற் பார்மஸி**
யா/ பிரதான வீதி.

**பிறைற் ஒக்ஸன்/ தொலைத் தொடர்பு நிலையம்**
யா/ பிரதான வீதி.

**மதுரா நகைமாடம்**
59, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**என்.எஸ்.ஏ. எலக்றோனிக்ஸ**
87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[68467]


# கேள்வி அறிவித்தல்

## நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

01. பின்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாண, நிர்மாணத்துறைத் திணைக்களப் பிரதம எந்திரி அலுவலகக் கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிவரை பிரதம எந்திரி அலுவலகம், நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டுப் பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இக்காரியாலயத்தில் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு 'எம் 9' அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
03. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும் இற்றை வரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாண நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி பிற்பகல் 04. 45 மணிவரை கீழ்க் காட்டியவாறு கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| மருதங்கேணி வைத்திய அதிகாரி விடுதி (வகுப்பு iv) நிர்மாணித்தல் கட்டம் 1 | 10, 000/- | 500/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பிற்பகல் 04. 45 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி,
பிரதம எந்திரி,
நிர்மாணத்துறைத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

([illegible])

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1931 — 09 — 25



மறைவு 1999 — 07 — 28

**திருமதி சிவகாமி இராமச்சந்திரன்**
(மம்மி)

27 – 08 – 1999

எம் அன்புத் தெய்வம் சிவபதம் எய்திய செய்தி கேட்டு எம் துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் குறிப்பறிந்து உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு நாளை (27 – 08 – 1999) வெள்ளிக்கிழமை அன்னாரது அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நெற்கொழு ஆதி வைரவரை வேண்டி நிற்கும்,

பாசமிகு
கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவ கோட்டம்,
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.

(68444)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நீதி எங்கே?

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவர்களும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளனர். 1999 — 2000 பல்கலைக்கழகக் கல்வி ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய வெட்டுப் புள்ளிகள் முந்திய ஆண்டுகளைவிட உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதனை ஆட்சேபித்தும் மறுபரிசீலனை செய்யுமாறு கோரியுமே இந்தத் தொடர் போராட்டம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெட்டுப்புள்ளிகள் மட்டுமன்றி கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களின் வெட்டுப்புள்ளிகளும் முன்னரைவிட உயர்த்தப்பட்டிருக்கின்றன.

போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள, கல்வி வளங்கள் தேய்ந்து மெலிந்து போயுள்ள வன்னி மாவட்டங்களின் மாணவர்களுக்குரிய வெட்டுப்புள்ளிகளை உயர்த்தி இருப்பது மெத்தவும் அநியாயமாகும். போர்ச் சூழ்நிலையில் மனப் பதற்றத்துடனும், உள நிலை கலங்கிய நிலையிலும் கல்வி பயிலும் மாணவர்களையும், வசதிகள் பலவும் கல்விவளங்களும் பெருகியுமுள்ள மாவட்ட மாணவர்களையும் ஒரே கோல் கொண்டு அளப்பது நீதியல்ல அது பெருங் கொடுமை. வசதி வளம் நிறைந்த மாவட்டங்களுக்கு அருகில் வைத்துத் தராசில் நிறுப்பது தர்மமுமல்ல.

வன்னிப் பிரதேசம் மிகப் பெரிய விவசாயப் பிரதேசம் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான அபிவிருத்தித்திட்டங்கள் சிறிய அளவுகளிலும் அமுலாகவில்லை. ஏதோ பாடசாலைகள் இயங்குகின்றன என்ற பெயருக்கே கல்விசார் நடவடிக்கைகள் அங்கு நடைபெறுகின்றன வளங்கள் வசதிகள் அரிதிலும் அரிதாகுமாறு அரசு புறக்கணிக்கிறது. அதுவும் போதாது என்று மாணவர்கள் பசியோடு படிப்பதற்கும் நிர்ப்பந்திக்கப்படுகிறனர்.

இவற்றைவிட இன்னுமொரு கவனிக்கப்பட வேண்டிய அம்சம் உண்டு. வன்னிப் பிரதேச மாவட்டங்களில் அப்பகுதிகளின் நிரந்தரமான மாணவர்களைவிட போர்காரணமாகஇடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் புகலிடம் பெற்றனர்.

அதனால் வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் (கடைசி ஐந்து வருடங்களில்) இரண்டரை வருடங்கள் பயின்ற மாவட்டமே பல்கலைக்கழகப் புகுமுகத்துக்குரிய மாவட்டமாகக் கருதப்படுகிறது. அதனால் வன்னி மாவட்டங்களில் பல்கலைக்கழக அனுமதி கோரும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. ஆகையால் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் உயரவேண்டும்.

இதனைக் கணக்கிற் கொண்டு, வன்னி மாவட்டங்களிலிருந்து முன்னரைவிட அதிக மாணவர்களை அனுமதிப்பதே நீதியாகும். இது விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட பல்கலைக்கழக மாணவர் சங்கம் ஆறு மாதங்களுக்கு முன்னரே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எடுத்துக் கூறியிருந்தது.

ஆயினும் வழமையான விதிகளை இறுகப் பற்றிக் கொண்டே வெட்டுப் புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வழமையைவிட கூடுதல் புள்ளிகள் வகுக்கப்பட்டிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகும். உண்மைகளைப் பார்க்க மறுக்கக்கூடாது. இது விடயத்தை மறுபரிசீலனை செய்து அரசு நியாயம் வழங்க வேண்டும்.

## அச்சுவேலி தோப்பில் வீட்டில் பொருள்கள் சூறை

வலி கிழக்கு, ஓக. 26

அச்சுவேலிப் பகுதியில் இரவு வேளை வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த தங்கநகைகள், பணம் உட்பட 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சூறையாடிச் சென்றுள்ளதாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி தோப்புப் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் உமாதேவி என்பவரது வீட்டிலேயே கடந்த 18 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் இரவு வீட்டார் அருகில் உள்ள போதிப் பிள்ளையார் கோயிலில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்குச் சென்றிருந்த வேளை வீட்டில் ஆள்கள் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டு முன் கதவினை உடைத்து உட்புகுந்து தங்க நகை, பணம், றேடியோ உட்பட 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர். (ஐ-180)

## பிரார்த்தனை

தென்மராட்சி, ஓக. 26

ஆத்மஜோதிநா.முத்தையாவின் நினைவை ஒட்டி தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினர் பிரார்த்தனை நிகழ்வினை ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அடுத்த மாதம் ஐந்தாம் திகதி சங்கத்தானையில் உள்ள சங்க மண்டபத்தில் பிரார்த்தனைகள் நடைபெறுமென செயலாளர் அ.வைரமுத்து தெரிவித்துள்ளார். (ஐ-117)



## சாயி சிந்தனை

நீ கடவுளை உயர்த்திப் பேசிப் புகழ்ந்து பாட, உனக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள தூரம் விரிவாகும். கடவுள் ஒன்றும் புதியவரல்லர்; நீ பிறப்பதற்கு முன்பிருந்தே இருப்பவர். அது மட்டுமன்றி அவர் எப்போதும் நிரந்தரமாக இருப்பவர். இவ்வாறிருக்க அவரை உயர்த்திப் பேச என்ன அவசியம் வந்தது?

கடவுளை உனது பழைய நண்பனாக கருத வேண்டும். யாரிடமாவது புதிய நட்புக் கொள்ளும்போது அவரிடம் மரியாதைக்குரிய வார்த்தைகளைக் கூறிப் பேசுவீர்கள் அவன் பழைய நண்பனாகிவிட்டான். அவனிடம் பேச, உரிமையுடன் வார்த்தைகளைப் பயன் படுத்துவீர்கள். இறைவனையும் உங்களது பழைய நண்பனாகக் கருதினால் அதே உரிமையையும் நட்பையும் நீங்கள் அவரிடம் பெற்று ஆனந்திக்க முடியும்.

( ஆதாரம்: சாயி அருளமுதம் – 1998 )

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### குறைதீர்ப்பாய் குமரா!

தேன்சொட்டும் தமிழ் மழையில் நனைந்து உன்னைப்
பாடுகிறோம் — முருகா
பார் ஏத்தும் நல்லைப்பதி உறையும் செல்லப்
பெருமானே — கந்தா
மனமொன்றித் தலைவணங்கி உனைப்பாடிப்
போற்றுகிறோம் — வேலா
அருளைநீ வந்தெம் குறைதீர்த்து தந்தருளவேண்டும்
எழில் — குமரா

— நயினை விஜயன்

### நின்னருள் இன்றி யார்கதி?

எனக்குள்ளே நின்று எனக்கறியாமல் நீ
நண்ணுறு பொருளெலாம் நல்கி
வினைப்பயன் தகர்த்து தெளிவு கூறிய நீ
விட்டிடா தாண்டருள் கொடுக்க
நினைப்பது தகுதி கணக்கெலாம் தெரிந்தோய்
நின்னருள் இன்றியார் கதியோ
தனமெலாம் எனது அகம்புகச் செய்வாய்
நல்லூரி லுறையும் சண்முகனே

கந்தமுருகேசதாசன்



## நான் கண்டு போற்றினேன்

இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட்
சென்றிடுமோ

என்றடியா ரேத்து மினிய வொலி — நன்றுடைய

நல்லூரிற் தேரடியில் நான் கண்டு போற்றினேன்

சொல்லுந் தரமோ சுகம்.

– யோகர் சுவாமிகள்

## உபாகர்ம நாள் இன்று

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் ஆன்மாக்களது நலன் கருதித் தோன்றிய வேதம் இறைவனின் மூச்சுக்காற்று எனப்படும். எம்பெருமானின் அளவிட முடியாத பெருமை, பேராற்றல், உயிர்களிடமுள்ள பெருங்கருணை, உண்மை, நுட்பம் ஆகியவற்றையும் நாம் இச்சரீரம் பெற்றதன் பயனான இறைவனை வணங்கி முத்தி இன்பமடையும் உபாயங்கள் முதலானவற்றையும் பலவாறு விரித்துக் கூறுவது வேதம்.

நான்கு வேதங்களையும் பயின்றவன் உண்மை வழி நடந்து இனிமையான அமைதியான பண்புகளுடன், பிறர் நலத்தைப் பேணி, திடமான மனஉறுதியுடன் நற்செயல்களைச் செய்து, நன்மை தீமைகளை ஆராய்ந்து, சமநிலையில் வாழ்ந்து இந்த உலகை வழி நடத்துபவனாவான்.

உலக நன்மையின் பொருட்டுப் பரந்து கிடந்த வேதத்தை நான்காக வகுத்தருளியவர் காத்தற் கடவுளாகிய நாராயணனின் அம்சமான பராசர முனிவரின் புதல்வராக உலக நன்மையின் பொருட்டு அவதரித்த வியாசபகவானாவார். மறையோதும் வேதியர்கள் ஆண்டுக்கு ஒருமுறை வியாச பகவானுக்குப் பூசை வழிபாடுகள் செய்து விரதமிருந்து வேதமோதத் தொடங்கு நலே உபாகர்மம் எனப்படும்

ஆவணிப் பூரணையில் உபாகர்மா எனப்படும் வியாச வழிபாட்டைச் செய்து வேதம் ஓதுதலைத் தொடங்கி தைமாசப் பூரணை தினத்தில் வேதத்தை ஓதி முடிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தைமாசப் பூரணையின் பின்னர் செய்ய வேண்டிய செயல்களுக்கு வேதம் ஓத வேண்டி இருப்பதனால் ஆடி மாதப் பூரணையில் வேதம் ஓதிமுடித்தலை பிராயச்சித்தத்துடன் செய்வர். இவ்விதம் ஆண்டுக்கொரு முறை பயபக்தியுடன் தவறாது அனுஷ்டிக்க வேண்டிய சிறந்த விரத நாளே உபாகர்ம தினமாகும்.

நால்வேதிகளில் இருக்கு வேதிகளுக்கு ஆவணிப் பூரணையுடன் கூடிய திருவோணமும், யசுர் வேதிகளுக்கு பூரணையுடன் கூடிய அவிட்டமும், சாம வேதிகளுக்குப் புரட்டாதி அத்த நஷத்திரமும் (பாத்திரபதசுத்த) உபாகர்மத்திற்குரிய நாள்களாகக் கூறப்பட்டுள்ளன. யசுர்வேதிகளின் உபாகர்ம தினம் இன்றாகும்.

முனிவர்களின் வழியில் தோன்றிய அந்தணர்கள் இறைவனுடைய புண்ணிய தலங்களில் ஒருங்கு கூடிக் காலந்தோறும் உபாகர்மத்தைச் செய்து வருகின்றார்கள். நமது பூமியிலும் சிற்சில இடங்களில் ஓரளவு கேட்கும் வேத ஒலியை வளர்த்து வேத நெறி தழைத்தோங்கி மிகு சைவத்துறை விளங்க உதவுவோமாக. நான்மறை அறங்களும் ஓங்கி, நற்றவம் வேள்வி மல்கி, வேதநெறி சைவநெறியில் முற்றுப்பெற்று, மேன்மைகொள் சைவ நீதி இவ்வுலகமெல்லாம் சிறந்து விளங்கப் பிரார்த்தித்து அர்ப்பணிப்புடன் செயற்படுவோமாக.

- நியந்த்ரி

## இசை நிகழ்வு

தென்மராட்சி, ஓக 26

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் முழுநிலா இசை அரங்கு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி ப 4.00 மணிக்கு றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இசையரங்கில் சங்கீதவித்துவான்பொன்.ஸ்ரீவாமதேவன் தங்கேஸ்வரி சிவநாதன் (வயலின்) எஸ், துரைராசா (மிருதங்கம்) ஆகியோருடன் இசைவழங்குவார்

[ஐ-117]

## அகவொளி கருத்தரங்கு

அரியாலை, ஓக. 26

யாழ். அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் போயாதின கருத்தரங்கில் பிற்பகல் 3. 30 மணிக்கு 'கருச்சிதைவு தாக்கம்' குறித்த வீடியோ படமும் உரையாடலும் இடம்பெறும். (ஐ-17)

## கொக்குவில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக.26

கொக்குவில் இளைஞர் ஒருவர் திருநெல்வேலியில்வைத்து கடந்த 20 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் கோணாவில் ஒழுங்கையைச் சேர்ந்த தங்கலிங்கம்ஞானேஸ்வரன் (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் தற்பொழுது ஊரெழு படைமுகாமில் தடுத்து வைக்கப்படடுள்ளதாக படை வட்டாரங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவித்துள்ளன. (ஐ-5)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று வியாழன் மாலை 5. 30 மணி முதல் 7. 00 மணி வரை பி. ரஜீந்திரன், எஸ். செல்வகுமார் ஆகியோரின் நாதஸ்வர இசை இடம்பெறும் இதற்கு அணிசேர் சலைஞர்களாக எஸ். முருகையா, ரீ. ஜெயக்குமார் (கவில்) ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-ரி)

### உதயவாக்கு

சித்தினால் அகங்காரம் உண்டாகிறது. அந்த அகங்காரத்தால் ஒருவன் கடவுளை மறந்து போகிறான்.

— பகவான்

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## நாளை

ஆவணி 10

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை

வைகறை 5-19 வரை

நட்சத்திரம்: சதயம்

பின்னிரவு 1.38 வரை

சுபநேரம்: 6.05—7 35

ராகுகாலம்: 10 35—12.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். கே. தங்கவடிவேல் (சமாதான நீதிவான்)

அவர்களின்

# சேவைநலன் பாராட்டு விழாச் சிறப்பிதழ்

26 – 08 – 1999

## நல்லைக் குரு முதல்வர் ஆசி

கோப்பாயில் நீண்ட காலம் வாழ்ந்து கொண்டிருக்கும் தங்கவடிவேல் அவர்களை அனைவரும் நன்கு அறிவர். சமய சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி சமூகத்திற்கு வேண்டிய பணிகளை ஆற்றுவதில் முன்நின்று உழைப்பவர். கவிதை இயற்றுவதிலும் இயல், இசை, நாடகங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செய்வதில் மிகுந்த ஆர்வமுள்ளவர். இவரைக் கௌரவித்து அரசினால் சமாதான நீதிவான் எனும் பதவியை வழங்கியமை இவரை இன்னும் இத் தொண்டில் ஈடுபடுத்த வழி சமைத்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு வேண்டிய சேவையாக சமாதான நீதிவானின் சேவை உள்ளது. கோப்பாய் வாழ் மக்களுக்கு இவரது பணி இன்றியமையாதது திரு. தங்கவடிவேல் அவர்கள் இப்பணியில் நீதி வழுவாது நின்று சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## அருட் தந்தை தோமஸ் ஜோர்ஜின் ஆசிச் செய்தி

கோப்பாய் மத்தி பரி. கன்னி மரியாள் தேவாலயத்தில் அருட் தந்தையாகப் பணியாற்றி வருகின்ற வேளையில் பலருடன் சந்தித்துப் பழகும் வாய்ப்புக் கிட்டியது.

அத்தகையோரில் திரு. S. K. தங்கவடிவேல் அவர்களும் ஒருவர். எந்நேரமும் புன்னகை பூத்த முகம், கணீரென்ற குரல் பொதுப் பணிகளில் முன்னின்று செயற்படும் திறன். இவை அவரிடம் உள்ள பண்புகள்.

இவருக்குச் 'சமாதான நீதிவான்' என்னும் பட்டம் கிடைத்தமை இவர் முற்றாகவே தன்னைப் பொதுப் பணியில் ஈடுபடுத்த வழி அமைத்ததாகும்,

திரு. S. K. தங்கவடிவேல் அவர்களின் பொதுப்பணி சிறக்கவும், அவரது குடும்பம் சகல வளங்கள் பெறவும் தேவ ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

கோப்பாய் மத்தி
பரி. கன்னி மரியாள் தேவாலயம்.

## தன்னலமற்ற சேவையாளன்

தனது தன்னலமற்ற சேவையால் சமூக அங்கீகாரம் பெற்ற திரு. S. K. தங்கவடிவேலுக்கு இன்று சமாதான நீதிவான் பதவி மூலம் அரச அங்கீகாரம் கிடைத்ததை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேச பாடசாலைகள் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் கலை கலாசார அமைப்புக்கள் மூலம் தன்சேவையை வழங்கியவர். பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் முன்னோடியாகச் செயற்பட்டவர்.

ந. சிவகடாட்சம்
அதிபர்.

கோப்பாய்,
கிறிஸ்தவக் கல்லூரி.


சிறப்புமலர் அன்பளிப்பு

யசோ மரவேலைத் தொழிலகம்
இருபாலைச் சந்தி

துளசி வர்த்தக நிலையம்
இருபாலைச் சந்தி

றஞ்சனாஸ்
இருபாலைச் சந்தி

ராஜ் ஸ்ருடியோ
அரசடி வீதி, யாழ். நகர்.

வினோ நகைப்பூங்கா
கஸ்தூரியார் வீதி

வேல் றேட் சென்ரர்
114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சதுர்த்திகா களஞ்சியம்
இருபாலைச் சந்தி.

ஆனந்தா அச்சகம்
K. K. S. வீதி, யாழ் நகர்.




## திரு. S. K. தங்கவடிவேல்

(விலை மதிப்பீட்டுத் திணைக்களம். யாழ்ப்பாணம்.)

**பழைய மாணவர்:** நல்லூர் சாதனா பாடசாலை, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.

**உப தலைவர்:** பழைய மாணவர் சங்கம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**போஷகர்:** உதயதாரகை சனசமூக நிலையம்.

**கலைப் போஷகர்:** கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகம்.

**செயலாளர்:** மத்திய சனசமூக நிலையம் இருபாலைச் சந்தி, கோப்பாய். Kopay English Study Circle.

**முன்னாள்தலைவர்:** கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம், ஆசிரியர் தின விழாக்குழு, கோப்பாய் கல்விக்கோட்டம் [1994].

**முன்னாள் செயலாளர்:** கோப்பாய் கலாமன்றம், பழைய மாணவர் சங்கம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, பிரசைகள்குழு, கோப்பாய் தெற்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கம், கோப்பாய் நாவலர்பாடசாலை.

**முன்னாள் பொருளாளர்:** பழைய மாணவர் சங்கம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**எழுதிய நாடகங்கள்:** 'ஏன் பிறந்தேன்', 'மகளே என்னை மன்னித்துவிடு', 'உலகம் போகிற போக்கிலே', 'மலராத மொட்டுக்கள்', 'I Like யாழ்ப்பாணம் but . .', 'பெண்கள் வாழ்வு மலருமா ?'

பட்டி மன்ற நடுவர், கவியரங்கு கவியன், முன்னாள்வானொலிக்கலைஞன், பொது மேடை நாடக நடிகன், முன்னாள் மாவட்ட நாடகப் போட்டி நடுவர்.

## சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருமணி வழங்கிய அருளாசி

நயினாதீவு நாகபூஷணி அம்பாளை எக்குலதெய்வமாக வழிபடும் குடும்பம் திரு. தங்கவடிவேல் குடும்பம்.

S. K. தங்கவடிவேல் அவர்கள் முன்னாள் வானொலிக் கலைஞன்: பல நாடகங்கள் பொது மேடைகளில் அவரால் அரங்கேற்றப்பட்டன, பட்டி மன்ற நடுவராக. நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி நடுவராக பல தடவைகள் பங்காற்றியுள்ளார். சிறந்த பேச்சாளன், சிறந்த நடிகன், கவி அரங்குகளில் கவிதை செய்துள்ளார்.

கோப்பாய் நாவலர் பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளராக இருந்து கல்லூரியில் மதில் கட்டுவித்ததுடன் இவர் காலத்தில் தான் முதன் முதலாக பாடசாலை விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா ஆரம்பிக்கப்பட்டது. உதயதாரகை சனசமூக நிலைய வளர்ச்சிக்காக அதன் ஆரம்ப காலந்தொட்டு போஷகராக இருந்து பாடுபட்டு வருகிறார். கோப்பாய் ஐக்கிய கலாச்சார விளையாட்டுக்கழக கலைப் போஷகராக இருந்து பல கலை நிகழ்ச்சிகளை நடத்திவருகிறார். முன்பு கோப்பாய்க் கலாமன்ற செயலாளராக இருந்து நாடகம் உட்பட பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். கோப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்ததுடன் அதன் ஆரம்பத் தலைவராகவும் செயற்பட்டவர்.

கோப்பாய் மக்களால் எனக்கு பவளவிழா எடுத்த சமயம் பவளவிழாவின் வெற்றிக்கு முன்னின்று உழைத்தவர். பவளவிழாவில் அவர் பேச்சு இடம் பெற்றதுடன் பவளவிழா மலரில் அவரின் கவிதை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. S. K. தங்கவடிவேல் அவர்கட்கு சமாதான நீதிவான் பதவி கிடைத்தது மிக மிகப் பொருத்தமான விஷயமே. மேலும் இவ்விதமான பதவிகள்பெற வேண்டுமென அன்னை ஸ்ரீநாகபூஷணி அம்பாளை வேண்டிக் கொள்கின்றேன்.

## அரச அதிபரின் வாழ்த்து

திரு. S K. தங்கவடிவேல்அவர்கள் யாழ். இந்துக்கல்லூரியில் கல்விகற்கும்பொழுதேஅவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்ஒரு சிறந்த பேச்சாளர் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுப்போட்டிகளில் அவர் இந்துக்கல்லூரி சார்பாகப் பேசி பரிசில்கள் பெற்றவர். கல்லூரி பட்டிமன்றங்களில் பங்கு கொண்டு சிறப்பாக வாதிட்டவர். கல்லூரி பொது வைபவங்களில் உரையாற்றியுள்ளார். கல்லூரியின் கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞான மன்றத்தின் உபதலைவர் பதவி வகித்தவர். கல்லூரியில் பரிசில்கள் பெற்று சிறந்த மாணவனாகத் திகழ்ந்தவர் தற்சமயம் அவருடைய ஊரான கோப்பாய்க் கிராமத்தில் பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வருகிறார். கலை ஆர்வம் கொண்ட அவர் முன்னாள் வானொலிக் கலைஞன் நாடகங்கள் பல பொது மேடைகளில் அரங்கேற்றியுள்ளார். அவர் இந்துக்கல்லூரியில் சேர்வதற்கு முதல் கல்வி கற்ற கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் செயலாளர், பொருளாளர் பதவி வகித்ததுடன் தற்சமயம் உபதலைவராகப் பதவி வகிக்கின்றார். வேறும் பல பொது ஸ்தாபனங்களில் பதவி வகிக்கும் திரு. S.K. தங்கவடிவேல் அவர்கள் சமாதான நீதிவானாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு எனது வாழ்த்துக்கள்.

## பிரதேச செயலர் வாழ்த்து

எஸ். கே. தங்கவ்டிவேல் அவர்களை நான் நீண்ட காலமாக நன்கு அறிவேன். தனது பகுதி சம்பந்தமானபொது அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக அடிக்கடி வந்து என்னுடன் கலந்துரையாடுவார். பல பொது அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கத்துக் கூடாக பல அரிய பணிகளைச் செய்தவர். கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சிக்கு கலை நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி, அக்கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டதுடன், அதன் கலைப்போசகராகவும் பணியாற்றி வருகின்றார்.

நாடகத்துறையில் எமது பகுதியின் முன்னோடியாக விளங்கும் திரு. தங்கவடிவேல் பல நாடகங்களை எழுதி, நெறியாள்கையும் செய்து மேடையேற்றியுள்ளார்.

கோப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகால தலைவராகவும் இருந்து அச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்ட திரு. தங்கவடிவேல் அவர்களுக்கு சமாதான நீதிவான் பதவி கிடைத்ததையிட்டு அவரது சேவையைப் பாராட்டி கோப்பாய் மக்களால் வெளியிடப்படும் இம்மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

க. கேதீஸ்வரன்,
பிரதேச செயலர்- கோப்பாய்.


சிறப்புமலர் அன்பளிப்பு

Mandras Communication Center
Kaithady
Prop: K. BALARAJAN

கந்தையா ஜுவலறி
கல்வியங்காடு.

கோப்பாய் சேவிஸ் ஸ்ரேசன்
கோப்பாய்ச்சந்தி.
உரிமையாளர்: சி. கிருஸ்ணபிள்ளை

P. J. பர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர்.

மோகன்ஸ்
யாழ். வீதி, நெல்லியடி.

கோல்டன் ஸ்ரார்
214, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

நாஷனல் மோட்டோர்ஸ்
266B, ஸ்ரான்லி வீதி.


மற்றும் நெருங்கிய உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

**************

சமாதான நீதிவானாக பதவியேற்றிருக்கும்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த

**திரு. S. K. தங்கவடிவேல்**

அவர்களை சகல சிறப்பும் பெற்று இச்சேவையில் இனிதே நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

க. கணேசலிங்கம் குடும்பம்
க. சண்முகசுந்தரம் குடும்பம்

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (68489)

# வாழ்த்துகின்றோம்

\#\#\#\#\#\#\#\#\#\#\#\#\#\#\#\#\#\#

எமது சங்கத்தில் தலைவராகப் பதவி வகிக்கும்

**அருளப்பு சென். டெனிஸ்ராசா**

அவர்கள் 23-08-1999 சமாதான நீதிபதியாக பதவிப் பிரமாணம் எடுத்ததையிட்டு எமது குருநகர் மக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

நிர்வாகிகள், ஊழியர்கள், அங்கத்தவர்கள்

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம்.

T. P. No. 021-3083 (68492)

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
உயர்தர வர்த்தகப் பிரிவு (2000) மாணவி

**திருமகள் கனகசபை**

(மீசாலை)

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலி களைச் செலுத்தி அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உயர்தர வர்த்தகப்பிரிவு
(2000 C1) மாணவர்கள்,
யா/சாவ. இந்துக்கல்லூரி.

[68494)

# மரண அறிவித்தல்கள்

## வேலன் நாகமுத்து (ஆசை)

மாவை கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் சிமெந்துக் கூட்டுத்தாபன போசனசாலையிலும் உரும்பராய் கொங்கிறீட் பகுதியிலும் கடமையாற்றியவருமாகிய வேலன் நாகமுத்து (ஆசை) 25-08-1999 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 25-8-99 இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (68486)

## திருமதி அருணாசலம் மாசிலாமணி

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி அருணாசலம் மாசிலாமணி 25-08-1999 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் K. V. அருணாசலத்தின் அன்பு மனைவியும் பொன்னையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற குமாரவேலு கனகசபையின் பெறாமகளும் ஞானபண்டிதரின் சகோதரியும் தர்மலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), மகாதேவன் [லண்டன்], கனகம்மா, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் தாயாரும் இராமநாதன் (இளைப்பாறிய கிராமசேவையாளர்), மங்கையர்க்கரசி ஆகியோரின் மாமியாரும் தயாபரன் (டென்மார்க்), மீனலோஜினி (இந்தியா), கௌசலா (நோர்வே), சக்திவேலன் (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் லதாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-08-99) வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
அ. தர்மலிங்கம் (மகன்)
பொ. ஞானபண்டிதர் (தம்பி)

''சிவசக்தி மகால்''
சிறுப்பிட்டி தெற்கு. [68490]

## பாரபட்ச...

( 2ஆம் பக்கத் தொடர்)

''நாங்கள் எழுதுவதை விரும்பாத எவரும் குண்டுகள், கிரனேட்டுகள் கொண்டு தாக்கும் விவகாரமாக இது உருவெடுத்துள்ளது ஆகையால் எதனை வெளியிடுகிறோம் என்பது குறித்து நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது'' என்று இந்த நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் ''டொச்பிறெஸ்அஜென்ரர்'' என்ற பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லையெனினும் அரசாங்க சார்புடைய உப இராணுவக் குழுக்களில் ஒன்றே இந்தச் சம்பவத்தின் பின்னால் இருந்திருக்க வேண்டுமென்று பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த இராணுவக்குழுக்களின் நடத்தைகள் குறித்து வெளியிடப்பட்ட கண்டனங்களுக்கு ஒரு பழி வாங்கலாக இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும் அவர் சொன்னார், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கத் துருப்புகள் நடத்திய தாக்குதல்களில் குறிப்பிட்ட உப இராணுவக் குழுக்கள் உதவி புரிந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

ஸ்ரீ லங்காவின் சிறுபான்மைத் தமிழ் இனத்தவர்களுக்கு சுதந்திரம் கிடைக்கப் போராடும் ஒரு கெரில்லா இயக்கமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகும். மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது குறிப்பிடத்தக்கது

பக்கச்சார்பு இல்லாத பத்திரிகையாளர்களின் அமைப்பு என்ற வகையிலும் அனைத்துலக பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க அர்ப்பணித்து வரும் அமைப்பு என்ற வகையிலும் கொழும்பில் இயங்கும் சுதந்திர ஊடக இயக்கத்துடன் சேர்ந்து பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

உதயன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இலங்கையின் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தல் என்றே நாம் கருதுகின்றோம். நாட்டின் மிகவும் கிளர்ச்சி மிகுந்த ஆபத்தான பகுதியில் பணிபுரியும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிப்பது நெருக்கடியான ஒன்றாகும். மோதல் நடைபெறும் இடங்களுக்கு பத்திரிகையாளர்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள பலத்த இராணுவக் கட்டுப்பாடுகள் இலங்கையின் 16 வருட சிவில் யுத்தம் குறித்து உண்மையான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு மிகுந்த குந்தகம் விளைவித்துள்ளன.

உதயனுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பாரபட்சமற்ற முறையில் முழு அளவிலான விசாரணைகளை உடனடியாக நடத்தி அந்த விசாரணைகளின் முடிவைப் பகிரங்கப்படுத்துமாறு மேன்மை தங்கிய தங்களைப் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு கேட்டுக் கொள்கிறது.

இது விடயம் குறித்துத் தங்களது கவனத்தைச் செலுத்துமாறு கேட்டு தங்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவிக்கின்றோம். இது குறித்து தங்கள் பதிலையும் எதிர்பார்க்கின்றோம் — என்று உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுக்குத் தாம் எழுதிய கடிதத்தின் பிரதிகளை அந்த அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ஆன் கே. கூப்பர் உலகின் பலபாகங்களிலும் உள்ள 26 சர்வதேச பத்திரிகையாளர் அமைப்புக்களுக்கும் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் அனுப்பிவைத்துள்ளார். [அ-7]

# பாராட்டு விழா

*-*-*-*-*-*

வித்துவான் V. பத்மநாதனின் புதல்வன்

செல்வன் **மயூரன்** அவர்களுக்கு

இசைதிறன் பாராட்டி

''நாதகான இளவரசர்''

என்னும் பட்டம் சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் வைபவம் நடைபெற இருப்பதால் அனைத்து ரசிகர்களையும் இப் பாராட்டு விழாவைச் சிறப்படைய அனைவரையும் அழைக்கின்றோம்.

இடம்: நெடியகாடு பிள்ளையார் ஆலயம்
(வல்வெட்டித்துறை)

காலம்: இன்று 26 - 08 - 1999 வியாழக்கிழமை

பட்டம் பெறுபவர்: நாதகான இளவரசர்
செல்வன் ப. மயூரன் (உடுப்பிட்டி)

பரிபாலனசபை,
நெடியகாடு பிள்ளையார் ஆலயம்,
(சி/8650) வல்வெட்டித்துறை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பகவதிஅம்மா இராசரெத்தினம்

சங்கானை ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதிஅம்மா இராசரெத்தினம் அவர்கள் 25-8-1999 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசரெத்தினத்தின் அன்பு மனைவியும் கந்தசாமி [கனடா], குணரெத்தினம் [சண்முகானந்தா ரெக்ஸ்ரைல், ஸ்கந்தபுரம்], சரோஜினிதேவி [கொழும்பு], இராஜசிங்கம் [நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்] லலிதாதேவி [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் கோணேஸ்வரி [கனடா]. சிவனேஸ்வரி [ஸ்கந்தபுரம்], குமாரசிங்கம் [சிங்கம் ரெக்ஸ்ரைல், கொழும்பு], நிர்மலாதேவி [சங்கானை], சிறீகாந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, சிவகாமிபிள்ளை, ராமசாமி, கனகம்மா, அலங்காரசிங்கம், காராளசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் விக்கிரமன், வற்சலா, சியாமளா, விபுலானந்தன், மேனகா [கனடா], தர்மிளா, தனுரா, கஜரூபன் [ஸ்கந்தபுரம்], இந்திரா [கொழும்பு], விமலா [கனடா], செல்வகுமார் [லண்டன்], ராஜ்குமார் [ஆஸ்திரேலியா], சர்மிளா, கிருஸ்ணா, லதா [கொழும்பு], வினோத், ரபீசன், சிந்துஜா, சிந்தியா [சுவிஸ்] ஆகியோரின் பேர்த்தியும் நவிதனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [26-08-99] வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராஜசிங்கம்
(மகன்)

ஓடக்கரை வீதி (தேவாலய வீதி),
சங்கானை. (சி/8656)

## திருமதி செல்லம்மா நாகலிங்கம்

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலையும் உரும்பிராய் வடக்கையும் வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி செல்லம்மா நாகலிங்கம் நேற்று (25—08—99) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களாகிய விசுவலிங்கம், செல்லத்துரை, தங்கம்மா மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் சகோதரியும் தங்கராசா, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, நடராசா, யோகராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோபாலசிங்கம் (கரும்புத் தோட்டம், ஸ்கந்தபுரம்), காலஞ்சென்ற சீவரத்தினம் புவனேஸ்வரி, கோதைநாயகி, புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பகீரதன் (பிரான்ஸ்), திருமதி மயூரதி (பிரான்ஸ்), திருஞானசுந்தரம், திருமதி ஜெயகௌரி (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயசொரூபி, ஜெயகீதா, சசிதரன், ஜெயவாணி, ஜெயமோகன் (கனடா), ஜெயகோபன் (கனடா), ஜெயரூபன் (கனடா), ஜெயபரன், ஜெயானந்தன், ஜெயவாசுகி, ஜெயகலையரசி, தர்சினி, சுபாங்கனி, இராஜதீபன், சுபோதினி சஞ்சீவன், தரங்கினி, யசோதரன், யாதவன், கம்ஷவாகினி, துர்ஷிகா, நிருஷிகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நிவேதிகா, அஸ்வினி, விதுஸ்னா, விதுஷன், ஆதவன், ஆதாங்கனி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-08-99) வியாழக்கிழமை பிற்பகல் 1. 00 மணியளவில் குமரகோட்டம் கோண்டாவிலில் நடைபெற்று கோண்டாவில் இணுவில் காரைக்கால் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. தங்கராசா
(மகன்)

குமர கோட்டம்,
கோண்டாவில். (68497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)
கிரனேட் வீசினர். பின்னர் அருகில் உள்ள பொலீஸ் காவலரண் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றனர்.

தாக்குதல் நடத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற நபர்களைப் பிடிப்பதற்காக பொலீஸார் அவர்களைத் துரத்திச் சென்றனர்,

ஒருகிலோ மீற்றர் தூரத்தில் உள்ள உக்கிலாங்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ள ரெலோ முகாம் முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தப்பட்டதை அவதானித்த பொலீஸார் முகாமுக்குள் சென்றனர் என்றும்—

அங்கிருந்தவர்களை அவர்கள் விசாரித்துக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்து முகாமைச் சுற்றிவளைத்த அதிரடிப்படையினர்முகாமை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

அச்சமயம் அந்த முகாமில் இருந்த 25 ரெலோ உறுப்பினர்களில் 20 பேர் பின்பக்கத்தால் தப்பி ஓடினர்.

ஏனையோரில் தீபன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கும் மற்றும் நால்வர் அடிகாயங்களுக்கும் உள்ளானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து முகாமில் இருந்த மோட்டார்சைக்கிள், சைக்கிள்கள், அவர்களின் உடைமைகள் எரிக்கப்பட்டன என்றும்—

முகாம் அடித்துச் சேதமாக்கப்பட்டது என்றும்—ரெலோவினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா மற்றும் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

(இ-164-3)

A V. M. ராஜன், புஸ்பலதா
குழுவினர் பங்குபற்றும்
மாபெரும் நிகழ்ச்சி
அன்பு வெள்ளம்
இடம்: உடுவில் மகளிர் கல்லூரி மைதானம்
இன்று (26-8-99) மாலை 3. 30 (புதிய நேரம்)
பிரவேசம் இலவசம்.
(சி/8312)

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி தற்பொழுது கஸ்தூரியார் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
'சுப்பஸோ' வின் சேவைகள்
அண்மையில் வெளிவந்த அதி நவீன மிக்ஸர் மூலம் சிறந்த முறையில் உங்களது இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை வீடியோ படம் பிடித்திடவும் வர்ணப்புகைப்படம் பிடித்திடவும்
புதிய, பழைய சினிமாப் பாடல்களையும் கிறிஸ்தவ பாடல்களையும் பொப் இசைப் பாடல்களையும் உடனுக்குடன் சிறந்த முறையில் ஓடியோ பதிவு செய்திடவும் இந்தியாவில் இருந்து வெளியாகும் திரைப்படங்களை VCD மூலம் வீடியோ பதிவு செய்திடவும் என்றும் எப்பொழுதும் வாடிக்கையாளர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்தவர்கள்
"சுப்பஸோ வீடியோ. ஓடியோ அண்ட் கலர் லாப்"
அனைத்து சேவைகளையும் உடனுக்குடன் பெற்றிட நாடவேண்டிய ஸ்தாபனம்
சுப்பஸோ
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(சி/8655)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)
தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது முகாமுக்கு வந்த நான்கு பொலீஸார் அங்கு விசாரணைகளைமேற்கொண்டிருந்த சமயம், முகாமை 50 க்கு மேற்பட்ட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

முகாமில் இருந்த 25 பேரில் 20 பேர் பின்பக்கத்தால் தப்பி ஓடி விட்டனர். எஞ்சிய ஐவரும் அவர்களின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 30 கலிபர் ஆயுதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. முகாமில் இருந்த எமது உடைமைகள் எரிக்கப்பட்டு, முகாம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

எமது உறுப்பினர்களில் 50 பேரைத் துணைப் படைக்குத் தருமாறு கேட்கப்பட்டதை ஏற்க நாம் மறுத்ததாலும்—

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்கு அளிப்பதாலும் —

படையினருடன் ஒத்துழைத்து இயங்காததாலும் — ஆத்திரமடைந்த படையினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி எமது முகாம் தாக்கப்பட்டபோது அது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் படை உயர் அதிகாரிகளுக்கு நாம் முறையிட்டோம். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இனியும் இது போன்ற தாக்குதல் தொடரும் பட்சத்தில் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசுக்கு எதிராகச் செயற்பட்டது போன்ற செயற்பாட்டுக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும். — இப்படி அவர் கூறினார்.

(இ-3-164)

St. Antony's Academy
தமிழ் – ஆங்கிலம்
தட்டச்சு
சுருக்கெழுத்து
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்:
30-08-1999
இதில் கற்கவிரும்புவோர் முன்கூட்டியே பெயர்களை பதிவுசெய்து கொள்ளவும்.
50, David Road,
Jaffna.
(68471)

## 'சுடர்' மகேந்திரன் மணிவிழா

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் 'சுடர்' இ. மகேந்திரனின் மணிவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் காலை 9 மணிக்கு இடம்பெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து மணிவிழா நாயகர் குடும்பசமேதரராய் ஆலயத்தில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஹண்டி பேரின்பநாயகமண்டபத்துக்கு அழைத்து வரப்படுவார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை பதில் பீடாதிபதி கே. தேவராஜாவும் வாழ்த்துரையை கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமிகோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ க. சிவதாஸக் குருக்கள், தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி வண. கலாநிதி எஸ் ஜெபநேசன் ஆகியோரும் நிகழ்த்துவர் அதைத் தொடர்ந்து நயப்புரைகள் இடம்பெறும்.

பிற்பகல் 12. 30 மணிக்கு மலர்வெளியீடும் 12. 45க்கு விழா நாயகருக்கு அபிமானிகள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தலும் விழாநாயகரின் உரையும் இடம்பெறும்.

## சந்நிதி...

(முதலாம் பக்கத் தொடர்)
னால் வந்து கொண்டிருந்த மினி பஸ் மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தஇவரதுபெரிய தகப்பனாரும் பெரிய தாயாருமான கந்தையா சோமசுந்தரம் (வயது 55), சோமசுந்தரம் அன்னப்பிள்ளை (வயது 50) ஆகியோரும் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னால் வந்த வாகனத்துக்கு இடம் விடுவதற்காக மோட்டார் சைக்கிள் வீதியின் கரை ஓரமாகச் செலுத்தப்பட்டது என்றும்—

மோட்டார் சைக்கிள் மணலில் சிக்கி நிலை குலைந்து சரிந்த போது பின்னால் இருந்து பயணம் செய்து கொண்டிருந்த பிரஸ்தாப இளம் பெண் கீழே விழுந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மரண விசாரணை நடத்தினார். இது தொடர்பாக தொடர்ந்து விசாரணைநடத்துமாறு பொலீஸாரைப் பணித்த பதில் நீதிவான்பிரஸ்தாப மினிபஸ் சாரதியை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அதே சமயம்
இவர்கள் மூவரும் வந்த மோட்டார் சைக்கிளும் அபகரித்துச் செல்லப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு கார் ஒன்றைப் பிடித்து வருவதாகக் கூறி அங்கு நின்ற ஒருவர் அந்த மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றார் என்றும் —

பின்னர் அவர் திரும்பிவரவில்லை என்றும் — கூறப்படுகிறது.

(இ-6-180-15-117-31-109)

## தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்)
மேற்கொள்ளப்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் இருந்து இடம்பெயர்ந்து பிரஸ்தாப அகதி முகாமில் தங்கியிருந்த இராசலிங்கம் தினேஷா என்ற இரண்டு வயதுக் குழந்தையே உயிரிழந்தது.

அந்தக் குழந்தைக்கு அருகில் இருந்த அவரது சகோதரியான இராசலிங்கம் ஜெனிபா (10 வயது), பாண் வாங்கக் கடைக்குச் சென்ற குருபரன் நிமல்ராஜ் (14 வயது) ஆகியோர் காயமடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-164-3)

## சப்-இன்ஸ்பெக்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)
யினர் கண்டி மற்றும் கொழும்பு வைத்திய சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான படையணிகளுக்கு உதவுவதற்காக அரந்தாவ, புளுக்குணாவ முகாம்களில் இருந்து மேலதிக படைகள் செல்வதைத் தடுக்கும் வகையில் அந்த முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர் என்றும் —

படையினர் பதில் தாக்குதல்களை அம்பாறை மாவட்ட எல்லைப்பகுதிக் காடுகளை நோக்கி நடத்தினர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

(இ-3-9-21)

யாழ். மண்ணில்...
புதியதோர் கணனி உலகம் வெகு விரைவில் உதயம்!
STP Computer World
கணனிப் பயிற்சி வழங்குவதில் விளக்கை விளக்கிடும்
கலங்கரை விளக்காகத் திகழும் ஓர் நிறுவனம் அதுவே
STP COMPUTER WORLD
நவீன கணனித் தொழில்நுட்பங்களுடன் சகல தரப்பினருக்குமான
கணனிப் பயிற்சிகளை வழங்க வெகு விரைவில் உதயமாகிறது
STP COMPUTER WORLD
எங்கே? எப்போது?
28 - 08 - 99 சஞ்சீவி பத்திரிகை விடை பகரும்
(68482)

ஓம் கணபதி துணை
சிவநெறி கல்வி நிலையம்
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகாமையில்)
முதலாம் ஆண்டு நிறைவுவிழாவும்
பரிசளிப்பு வைபவமும் - 1999
இடம்: யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.
காலம்: 26-08-1999 வியாழக்கிழமை
பிற்பகல் 2.00 மணி (புதிய நேரம்)
தலைமை: திரு. பா. கிருபாகரன் (B. A.)
(நிர்வாகி, சிவநெறி கல்வி நிலையம்)
பிரதம விருந்தினர்:
திரு. V. மாணிக்கம் (B.A.Eco.)
(B. Phil - Dip in Edu. SLPS – 1)
(அதிபர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
சிவநெறி கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்.
(68473)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26 – 08 – 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org